உ

சிவமயம்.

ஆச்சியம்மன்

தோத்திரமஞ்சரி.

இஃது

காங்கயம் அஷ்டாவதானம்

V. சேஷாசல நாயடு அவர்களால்

இயற்றப்பட்டு

கொடுமுடிக்குச் சேர்ந்த

ஏமகவுண்டனூர்

சின்னசாமி கவுண்டரவர்களால்

சேலம்

சுதேசாபிமானி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1913.



62

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

ஆச்சியம்மன் பதிகம்.

விநாயகர்துதி.

சீர்கொண்ட காவிரியின் செய்யவளஞ் சூழ்வுயர்
கூர்கொண்ட கொங்கிற் கொடுமுடியில்—நேர்கொண்ட
வெற்றிமிகு மாச்சியம்மன் மேற்பதிகம் பாடவருள்
ஒற்றைமருப் பானைமனத் துள்.

ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்ட முப்பத்துமுக்கோடி தேவரைச்
சிட்டித்தபின்பு கயிலை
சென்றுபரமேசரிட நின்றருளையேகொண்டு
சேர்தங்கமார்கள் முதலாய்
வார்கொண்ட கன்னியர்கள் எழுவருடனேயாதி
வனம்வந்து கம்பைநதியில்
மாதபசு செய்துமே நீதபசுபதியன்னை
வாக்குவரமேயடைந்து
தார்கொண்ட ஓமகுண்டக்கரு யலைத்தம்பி
சதுரங்க சேனைதளமும்
தாரணியிலேவந்து நீரணிகொள் காஞ்சியில்
தக்கபூசைகளடைந்து
பேர்கொண்ட பலதலங்களிலும் விளையாடியே
ப்ரபலமிகு கொடுமுடியிலே
பெரியாச்சி மன்னனுக் கருள்மாட்சி முன்னிடப்
பெருகாச்சி யன்னையுமையே, (1)

2
சென்னை-60

ஈரேழுபதினாலு லோகங்களும் கிடுகி
டென்றேநடுங்க அண்ணன்
எற்றபதினெட்டா யுதம்பிடித் தேபரியி
லேறிமுன்னாகவரவும்
வாரேறுதங்கமார் சத்தகன்னியர்சூழ
மருளாண்டிபேச்சி பித்தன்
வலப்புறம் நடக்கவுங் கூத்தப்பெருந்தகையும்
வன்னியர் குமாரமக்கள்
தாரேறுமினிய காத்தவராயன் மதுரையான்
சாமிமறு மன்னவர்களும்
சயினியத்துடனிடப் புறமேவிவருகவும்
தங்கப்பலக்கில்வந்து
பேரேறுகாவிரி வளம்பெருகி வாழ்கின்ற
ப்ரபலமிகு கொடுமுடியிலே
பெரியாச்சி மன்னனுக்கருள்மாட்சி முன்னிடப்
பெருகாச்சி யன்னையுமையே: (2)

பத்தருக்கருள்புரிய வேயம்பனூரில்
படம்பிவாசற் காத்திடும்
பாரவிரணியனுடற் கூறுபடவே செய்து
பகவதியை வாதில்வென்று
சித்தமகிழ்வாகவே அவ்வூரிலுள்ளவர்கள்
செய்பூசை கொண்டுபின்னைச்
சேவித்துமெச்சுபெரு மாளுக்கு வெள்ளியில்
திகழ்பூசை தருமரசியே
எத்தனைவிதஞ்சொலிப் பூசிப்பதென்றுன்னை
ஏழையறியோமம்மணி
எங்களுக்குனையன்றி வேறுதுணையுண்டோமோ
இதுசமயம் எதிரில்வந்து

பெற்றபிள்ளைகள் தம்மை யாண்டருள் விரிந்திடும்
ப்ரபலமிகு கொடுமுடியிலே
பெரியாச்சிமன்னனுக் கருள்மாட்சி முன்னிடப்
பெருகாச்சி அன்னையுமையே. (3)

அன்னையே ஏழைகளறிந்து மறியாமலே
அவனிதனிலுன்றனுக்கு
யாதுபிழைசெய்திட்ட போதிலுமனந்தன்னி
லணுவளவுமெண்ணாமலே
உன்னையே நாங்களெல்லா மொன்றுகூடியே
உறுதியாய் வந்தழைக்க
ஒருநொடியிலேயுனது பொற்சிவிகையேறியே
ஒருகோடி சேனைசூழ
மின்னையேநிகருமிடை மடவார்கவரிவீச
விருதுபெறுமாசிமலையான்
மேவியதிகாரஞ் செலுத்திவரமந்திரிகள்
வெள்ளித்தடிக்காரரும்
பின்னையேரணிசூழ வந்தருளவேண்டுநீ
ப்ரபலமிகு கொடுமுடியிலே
பெரியாச்சிமன்னனுக் கருள்மாட்சிமுன்னிடப்
பெருகாச்சியன்னையுமையே. (4)

நீதமிகுமம்பலூர் பூசைமுடிவானபின்
நிறைகொள் ஆலந்தூரிலும்
நீவந்துவிளையாடி மேகமண்டலமுட்டி
நின்றதிரு வெங்கிமலையில்
சீதமிகுமலர்கொள் ஈச்சங்காடு தன்னிலே
சென்றுகுதி கொண்டிருக்கச்
சேருமுன் கின்னரிக்காரன் பின்னால்வந்த
திடமிக்க எமராசா

ஆதரவுபெறுசேனை வாதுசெயலே அவரை
ஆளாக்கி ஆதிவாரம்
அதிகமகிழ்வாகவே ஏமராசாவுக்கும்
அவர்துள்ளு குட்டிக்குமே
பேதமில்லாமல்முப் பூசைதருமன்னையே
ப்ரபலமிகு கொடுமுடியிலே
பெரியாச்சிமன்னனுக் கருள்மாட்சிமுன்னிடப்
பெருகாச்சி அன்னையுமையே. (5)

கோரியபடிக் கெங்களுக்கு வரமேதந்து
குடிகொண்ட மகமாயியே
குவலயந்தன்னிலே சகலசம்பத்துங்
கொடுத்தருளுமகமாயியே
வீரியமிகுந்தகருமலையோம குண்டத்தை
மேவியருள் மகமாயியே
விளைதினைப்பொங்கல் ஒருகுட்டி மங்களநாளில்
மேவியடை மகமாயியே
காரியத்துக்குமுன் வந்திருந்தேயதைக்
கைகூட்டு மகமாயியே
கனவிலும் உன்பேரை மறவாமலேவந்து
காத்தருளுமகமாயியே
பேரிகைமுழக்கவே பல்லக்கிலேவந்து
ப்ரபலமிகு கொடுமுடியிலே
பெரியாச்சிமன்னனுக் கருள்மாட்சிமுன்னிடப்
பெருகாச்சி அன்னையுமையே. (6)

திருவெங்கிமலைபூசை கொண்டபின் ஆலயம்
சித்ரமணிமண்டபத்தில்
தேவிநீ வீற்றிருக்கின்ற காலையிலுனது
சேதிதெரியாது சிலபேர்

அருளொன்று மிலேயென்று வாயிடும்புகள்பேசி
அக்கிரமமேசெய்யவும்
அவர்கள்பயமடையவே தண்ணீரிலேபந்த
மதையெரித்தக்கினிவசி
உருகியெரிகின்றதைக் கைப்பற்றி யவர்மீதி
லோச்சியருளேக்காட்டவே
உத்தமீசத்திரீ இத்தனைக்குங் கோப
மொண்ணுதெனக்கெஞ்சியே
பெருகுதேரெற்றியடி பணியவருளம்மையே
ப்ரபலமிகு கொடுமுடியிலே
பெரியாச்சி மன்னனுக் கருள்மாட்சி முன்னிடப்
பெருகாச்சி யன்னையுமையே. (7)

அஷ்டகுலபருவதம் சத்தசாகரமுடன்
ஆதிசேடன் படமுடி
யதுகிடுகிடென்றேநடுங்க வீச்சங்கா
டகன்றுநிறையாண்டாபுரம்.
இட்டமுடனேவந்து பூசைபெற்றிட்டபின்
ஏர்கொள்ராக்கன்பட்டியில்
இருபூசையதுகொண்டு நெடுநாளிருந்துபின்
இணையில்கூடற்சேரியில்
சட்டமுடனேவந்து நிலைகொண்டவரசியே
தர்மபரிபாலனஞ்செய்
தாரணீ காரணீ நாரணீ பூரணீ
தங்குபுகழ்வேதாரணீ
பிட்டினதிமண்கொண்ட பரமர்வடிவுடையம்மை
ப்ரபலமிகு கொடுமுடியிலே
பெரியாச்சிமன்னனுக் கருள்மாட்சி முன்னிடப்
பெருகாச்சியன்னை யுமையே. (8)

தாயேநின்வாசல் தனில்வந்து துதிபுரியவே
தரிசனங்காட்டவேண்டும்
தருவாக்குவரமுங் கொடுத்தருளை நாட்டியுன்
சத்தியம் நிலைக்கவேண்டும்
மாயேஸ்பரீ மாதமும்மாரி பெய்துநீர்
வளமது சுரக்கவேண்டும்
வளர்பர்தமது நீரிலெரியவைத்திவ்வுலகில்
மகிமைகள் நடத்தவேண்டும்
நீயேமுன்னால்வந்து வெண்ணீறுதந்துபிணி
நிற்கருலோட்டவேண்டும்
நிலைகொள் கருமலைபில்லி சூனியங்களையெலாம்
நிர்த்தூளியாக்கவேண்டும்
பேயேங்கியோடவே யருள்புரியுமன்னையே
ப்ரபலமிகு கொடுமுடியிலே
பெரியாச்சிமன்னனுக் கருள்மாட்சிமுன்னிடப்
பெருகாச்சியன்னையுமையே. (9)

ஆசாரவாசல்முன்னொரு கோடிபேர்வந்துன்
னடிகாண நிற்கிறார்கள்
அறுசுவைபதார்த்தங்கள் மலைபோலவேகுவித்
தமுதும்படைக்கிறார்கள்
தேசாதி தேசமெல்லாமறியவே நின்று
தேவர்மழை சொரிகிறார்கள்
தித்திக்குமுக்கனியு நீயருந்திடவென்று
தேடிமுன் வைக்கிறார்கள்
பூசாரிகளும்வந்து தூபதீபங்கொண்டு
பூசைசெய்திடுகிறார்கள்
பொங்கலும் மாவிளக்குங்கொண்டுமெடவார்கள்
போற்றியடி பணிகிறார்கள்

பேசாதிருப்பதும் அழகல்லவந்தருள்செய்
ப்ரபலமிகு கொடுமுடியிலே
பெரியாச்சிமன்னனுக் கருள்மாட்சிமுன்னிடப்
பெருகாச்சி யன்னையுமையே (10)

மங்களம்பொலிகின்ற துங்கமுயர் கொடுமுடியில்
வாழுநல்லாச்சிமகிபன்
மாதவத்தால் வந்தநீதமிகுபெரியாச்சி
மன்னன்வேண்டிடுதலாலே
தொங்குகலிநாலாயிரத்துத் தொளாயிரத்
தொண்ணூற்றுயேழ்மன்மதம்
தொடர்சிங்கமஞ்சிலிவ்வாலயந்தன்னிலே
தோன்றிநிலை கொண்டிருந்து
புங்கமுளமங்களம் தேதிபத்தொன்பதிற்
பூசைகொண்டிட்டஆச்சி
புகல்வாழி ஓமகுண்டம்வாழி சேனைபடை
பூரணமதாகவாழி
எங்கள்பெரியாச்சிமன்னன் கிளைகள்சுற்றமும்
இனியகொடுமுடியும்வாழி
இதைமுற்றுமேபடிப்பவர்கள் கேட்பவர்களும்
யாவர்களும் வாழிவாழி. (11)

வருகைப்பத்து.

காப்பு.

சந்தனஞ்சேர் சோலைத் தடங்கா விரிசூழ
வந்த கொடுமுடி மாநகரில்—சொந்தமுடன்
வாழுமெங்க ளாச்சி வருகைப்பத் தைப்பாட
வேழமுகத் தானருளை வேண்டு.

மணியேவருகதேவர்புகழ் மாதேவருகமூவுலகின்
அணியேவருககாஞ்சிபுரிக் கரசேவருகசொலும்வேதா
ரணியேவருகபரமர்மகிழ்ராணிவருக சீக்கறைசை
தணியேவருகஆச்சியம்மைத் தாயேவருகவருகவே. (1)

கண்ணேவருக கண்ணிறொளிக் கதிரேவருகச்செகமாயைப்
பெண்ணேவருகத்துதிக்கும்அருட் பேறேவருகப்பழமறையின்
எண்ணேவருகபொன்சிவிகை யேறிவருகசீர்க்கறைசை
தண்ணேவருக ஆச்சியம்மைத் தாயேவருகவருகவே (2)

திருவேவருகசெழிக்குமலர்த் தேனேவருகசெகம்படைக்கும்
உருவேவருகஉருவருவாம் உணர்வேவருகஅன்பருளக்
குருவேவருககோமளமெய்க் கொம்பேவருகசீர்க்கறைசை
தருவேவருகஆச்சியம்மைத்தாயே வருகவருகவே (3)

அனமேவருககன்னியர்கள் அருகேவருககருமலையான்
முனமேவருகஎமராச மூர்த்திவருகமருளாண்டி
இனமேவருகபாலமலை ஏந்தல்வருகசீர்க்கறைசைத்
தனமேவருகஆச்சியம்மைத் தாயேவருகவருகவே (4)

கூத்தப்பெருமாள்தான்வருக குலவுமதுரையான்வருக
காத்தராயன்நேர்வருக கனபேச்சிபித்தாண்டியும்வருக
கோத்தவன்னிராசருடன் குமரர்வருக்சீர்க்கறைசை
சாத்திவருகஆச்சியம்மைத்தாயே வருகவருகவே. (5)

நங்காய்பின்னைப்பணிந்தேத்த நாங்களறியோம் நீயெங்கள்
பங்கேயிருந்துன்னருளாலே பாரமழைகள்பொழியவைத்தே
யெங்கேயிருந்துமிளைத்தாலும் இரங்கிவருகசீர்க்கறைசை
தங்கிவருக ஆச்சியம்மைத்தாயேவருகவருகவே. (6)

மட்டார்அம்பலூர்ப்படம்பி வாசல்காக்குமிரணியனை
துட்டரபோடாவென்றுசொல்லி சூலம்விடுங்கண்ணேவருக
கட்டார்ஆலந்தூர்வந்தகண்ணே வருகசீர்க்கறைசை
தட்டாதிருந்தாளாச்சியம்மைத்தாயே வருகவருகவே. (7)

கண்டேசீனிச்சர்க்கரையே கரும்பேயமிர்தேகனிதேனே
வண்டேயுண்ணுமதுமலரே மாயேஸ்பரியேநீவருக
கண்டோர்மகிழப்பரிகுலுங்கக் காட்டிவருகசீர்க்கறைசை
தண்டார்புனையுமாச்சியம்மைத் தாயேவருகவருகவே. (8)

வான்மள்வுந்திருவேங்கி மலையில்வந்துவிளையாடி
ஆணீரில்பந்தமெரித் தருள்காட்டிடுங்கண்ணேவருக்
கேணளாவிவயல்நிறைந்து செந்நெல்விளைக்குஞ்சீர்க்கறைசைத்
தானமமரும்ஆச்சியம்மைத் தாயேவருகவருகவே. (9)

பன்னுமாண்டார்புரம்ரக்கியம் பட்டிகூடற்சேரியிலும்
மன்னிநிலைத்துப்பூசைகொள்ளும் வன்னமயிலேநீவருக
கன்னல்செந்நெலினுமணி கலந்தபணைசூழ்சீர்க்கறைசை
தன்னில்வளரும் ஆச்சியம்மைத் தாயேவருநவருகவே

சீரார்கலியையாயிரத்திற் சிறிதுமுன்மன்மதவருடம்
நேராரஞ்சில்நிலையாகி நிகழ்பத்தொன்பான்தேதிதனிற்
பேரார்கறைசைநல்லாச்சி பெற்றபெரியாச்சிப்பூமான்
ஏரார்பூசைகொள்ளாச்சி எவரும்வாழிவாழியவே. (11)

ஊஞ்சற் பாமாலை.

காப்பு.

சுந்தரக் கமுக மாரன் தொடர்குடைக் காம்பாய் மேவும்
அந்தரப் பொழில்சூழ் பொன்னி யணிகொடு முடியில் வாழும்
மந்தர முலையா ளாச்சி மயேஸ்வரி யூஞ்சல் பாடக்
கந்தரண் ணன்முக் கண்ணன் கணபதி காப்புத் தானே.

ஊஞ்சல்.

வண்ணமணிவுச்சிரத்தால் கால்கள்நாட்டி
மரகதமாமணியதனால்விட்டம்போட்டு
எண்ணரியமாணிக்கப் பலகைசேர்த்து
இழைத்தமணிப்பொன்னாற்சங்கிலிகள்பூட்டி
புண்ணியஞ்சேர்பெரியாச்சி மன்னன்தானும்
புனைந்துசெய்தநவரத்னஊஞ்சல்மீது
அண்ணல்கொடுமுடியரசி யாடிரூசல்
ஆச்சியம்மைத்தாயாரே ஆடிரூசல். (1)

மலரயனும்வாணியுமோர்வடந்தொட்டாட்ட
மாலினுடனிலக்குமியோர்வடந்தொட்டாட்ட
குஸ்வரியிந்த்ராணியுமோர்வடந்தொட்டாட்ட
குகனிருவர்மாதர்களோர்வடந்தொட்டாட்ட
இலகுசந்த்ரசூரியரோர்வடந்தொட்டாட்ட
இமையவர்கள்முனிவர்களோர் வடந்தொட்டாட்ட
அலர்கொள்கொடுமுடியரசியாடிரூசல்
ஆச்சியம்மைத்தாயாரே ஆடிரூசல். (2)

அந்தரதுந்துமிமுழங்கவானந்தன்னில்
அழகியகந்தருவர்கள்மாமலர்கள்தூவ
சந்தனங்கஸ்தூரிபன்னீர்வாசமோங்கச்
சாலவரம்பையரிருபாற்கவரிவீச
வந்தெதிரில்தும்புருநாரதர்கள்பாட
வர்ணமணிபொன்னூசல்மீதிலேறி
அந்தண்கொடுமுடியரசியாடீரூசல்
ஆச்சியம்மைத்தாயாரேஆடீரூசல். (3)

பத்தரிருபாலிருந்து பஜனைபாட
பாவலர்கள் கவிமாலை பாடிப்போற்ற
வித்தகஞ்சேர்மாமறையோர் வேதமோத
விளங்குமடவார்கள் நடமேவியாட
ஒத்தநவரத்தின ஆலாத்தியேந்த
ஒருகோடிதீபங்கள் ஒளிசெய்தோங்க
அத்தர் கொடுமுடியரசியாடீரூசல்
ஆச்சியம்மைத்தாயாரே ஆடீரூசல். (4)

பொன்சிவிகைத்தாதியர்கள் தங்கைமார்கள்
போற்றுகருமலை பாலமலையில்வாழும்
இன்பர்மருளாண்டிமெச்சும் பெருமாள்கூத்தன்
ஏர்பெறுங்காத்தவராயன் மதுரைவீரன்
மன்பெயர்கொள் வன்னியர்குமாரமக்கள்
மறுமன்னர்பேச்சி பித்தன்முதலோர்சூழ
அன்பர்கொடுமுடியரசீ ஆடீரூசல்
ஆச்சியம்மைத்தாயாரே ஆடீரூசல். (5)

பணிகொள்துள்ளுகுட்டியுடன் எமராஜா
பல்லக்கைவிட்டிறங்கிப் பக்கமேவி
துணிவுடனேகருமலையான் சொற்படிக்குத்
தொடர்சேனையாவர்களும் சூழ்ந்துநிற்க

மணிமுடிசேர் எண்ணேழுமன்னர்சென்னி
வணங்கியெதிர்நின்றிட மந்திரிகள்நாட
அணிகொள்கொடுமுடியரசி ஆடீரூசல்
ஆச்சியம்மைத்தாயாரே ஆடீரூசல். (6)

சோதிமிகும்அக்கினியில் வந்துதோன்றி
தூயகயிலாசமதில் சென்றுநீயும்
மாதியர்களுடன் ஆதிவனத்தில்மேவி
தபசுகம்பையருகுசெய்து பிரமனார்பால்
நீதிமிகுசேனையுடையாவும்பெற்று
நீலமணியேபொன்னூசல் தன்னிலேறி
ஆதிகொடுமுடியரசி யாடீரூசல்
ஆச்சியம்மைத்தாயாரே ஆடீரூசல். (7)

மெய்யருளுந்தெய்வமுனையன்றியிந்த
மேதினியில்வேறில்லை யென்றுநாங்கள்
கைநிறையமலர்கொண்டு துதித்துப்பாடக்
கடுகியெங்கள்முன்னிருக்குங் கருணையாளே
வெய்யவன்தேர்ப்புரவிகள் தங்களையைமாற்ற
விண்ணுடியோங்குபொழிற் பொன்னிசூழும்
அய்யர்கொடுமுடியரசி யாடீரூசல்
ஆச்சியம்மைத்தாயாரே ஆடீரூசல். (8)

தங்கமணிச்சிலம்புகொஞ்சச்சதங்கைபாடத்
தாள்நீட்டிப்பொன்னூசற்றன்னிற்சாய்ந்து
துங்கமதிமுகத்தினருள் பொழியநோக்கிச்
சுகந்தருகும் சுந்தரியேசொர்ணமானே
தங்குசுனைவேரில்வெடித்தனந்தனார்க்குத்
தக்கமதுவபிடேகந் தலையிலாட்டும்
அங்ககொடுமுடியரசி யாடீரூசல்
ஆச்சியம்மைத்தாயாரே ஆடீரூசல். (9)

சுத்தமேகங்களுமேயொன்றுசேர்ந்து
    தக்கபடிமாதமும்மாரிபெய்து
மூத்தடரும்கரும்புசெங்நெல் முதலாயோங்கி
    முளரிவயல்தனில் விளைய அருளுமாதே
பத்தரையாயாயிரத்து எட்டுமாற்றுப்
    பசும்பொன்சங்கிலிபூட்டும் ஊஞ்சல்தன்னில்
அத்தர்கொடுமுடியரசி யாடீரூசல்
    ஆச்சியம்மைத்தாயாரே ஆடீரூசல். (10)

முற்றிற்று.

நூலாசிரியனுடைய வேண்டுகோள்.

மதிதவழும்சிகரசிவ மலைக்கருணைமழைபொழியும்
வள்ளல்தாளைத்
துதிபுரியும் அவதானிசிங்கைச்சேடாசலம் யான்
சொன்னசீர்கொள்
பதிகம்வருகைப்பத்துஞ்சற்கும்மி தனில்வழுக்கள்
படிந்திட்டாலும்
அதிகமகிழ்வுடன்கறைசைஆச்சியம்மன் பொறுத்தருளை
அருள்செய்வாளே.

காங்கயம் அஷ்டாவதானம்,
☞ V. சேஷாசல நாயடு.

இந்நூலாசிரியர் பாடி அச்சிட்ட புஸ்தகங்கள்.

—————:o:—————

1. மயில்வாகனக் கடவுள் பதிகம்.
2. ஸ்ரீரங்கம் வழிநடைச் சிந்து.
3. கறைசைசிலேடை வெண்பா.
4. சிலேடை வெண்பாத்திரட்டு.
5. பூகம்பக் கீர்த்தனை.
6. புகழிமலைப் பதிகம்.
7. நல்லூர்ப் பதிகம்.
8. பில்லூர்ப்பதிகம்.
9. அங்காளம்மன் பதிகம்.
10. சென்னப்பை மகாளிப்பதிகம்.
11. ஆநந்த விநாயகர் பதிகம்.
12. தியானமஞ்சரி.
13. ஞானரசமஞ்சரி.
14. பக்திரச மஞ்சரி.
15. சரசகவி மஞ்சரி.
16. துதிமஞ்சரி.
17. நாமக்கல் விநோதச் சிந்து.
18. தாந்தோணி வழிநடைப் பதம்.
19. திடச்சித்தக் கும்மி.
20. கரூர் கும்பாபிஷேகக் கும்மி.
21. சிதம்பரம் அன்னசாலைக் கும்மி.
22. மகாமக அலங்காரம்.
23. மதுக்கரைச் செல்லாண்டியம்மன் பதிகம்.
24. திருவானைக்கா மும்மணிக்கோவை.
25. மஹாமாரிக் கும்மி.
26. தோத்திரக் கவிமாலை.
27. வெண்ணெய்மலை வண்ணம்.
28. கல்யாணப்பாட்டு.
29. சென்னிமலையாண்டவர் பதிகம்.
30. ஞானசித்தர் வண்ணப்பதிகம்.
31. சூதுவிலக்கு.
32. ஆயியம்மன் சந்தம்.
33. நீலியம்மன் காதல்.
34. குலதெய்வமாலை.

உ

ஆச்சியம்மன் கும்மி.

காப்பு.

சீர்பெறுங்கொங்குதேசம் செழித்திடும் அரையநாட்டில்
ஆர்பெறுங்கறைசையாச்சியம்மன்மேல் கும்மிபாட
வார்பெறுங் மகுடலிங்கர்வடிவுடையம்மன் மக்கள்
தார்பெறுமலையம்மன்சுந் தரக்கறுப்பணனும் காப்பாம்,

சந்தக் கும்மி.

சீர்மேவும் செல்வக் கொடுமுடிவாழ்கின்ற
தேவியாச்சியம்மன் மீதினிலே
செந்தமிழாலே - கும்மிசொல்லச் - சுந்தரம்மேனே - முடிவுற்
சித்திக்கொரு வித்தைத்தரு முத்திக்கடல் வித்தைக்குயர்
சித்திவிநாயகன் காப்பாமே (1)

வேதச்சடைச்சி மகமாயி தில்லை
மேவிநடிக்குப்அலங்காரி
வீரகெம்பீரி - கனமிகு - தீரசிங்காரி - அக்கினியில்
விளையுங்கிளி யெனவந்திடு குணமிஞ்சிய அதிசுந்தரி
வெற்றிமிகுந்த திரிசூலி (2)

ஓங்கிய வன்னிய ராஜர்குலத்தி
லுதித்தகொடுமுடி நல்லாச்சி
உத்தமன்பெற்ற - பிரபலன் - வித்தையில் உற்ற - குபேரனு
உருவாயுயர் தரைமீதினில் வருசீர்மிகு பெரியாச்சியின்
உள்ளத்தில் வாழுந்திடும் ஆச்சியம்மன்

மூண்டிடும் அக்கினி தன்னிலுதித்தபின்
முப்பத்திமுக்கோடி தேவரையும்
முன்படைத்திட்டாள் - கயிலையில் - அன்புடனுற்றாள் தங்கமார்
முதலாகிய எழுமாதர்கள் உயர்தாதியர் மலையானையும்
முக்கியமாகத்துணைபடைத்தாள் (4)

ஆதிவனம்வந்து கம்பைநதியின்
அருகில் தவம்புரிந்தீசனிடம்
ஆகியசேனை - படைகளும் - வேகமேபெற்று - கருமலை
யானைப்பெரு சேனைக்கொரு தானத்தலை யாகத்ததி
ஆட்சிகொடுத்தவரேறிடவே (5)

வானந்தனிலே பறந்திடு மேகத்தை
மல்லுக்கிசைந்த பரியாக்கி
வாழ்த்திக்கொடுத்து - புவிதனில் - நாற்றிக்கடுத்து - ஜெயத்துடன்
மங்கைப்பெரு நங்கைக்கிடம் தங்கித்தின முங்கட்டளை
வார்த்தைப்படிக்கு நடங்கவென்று (6)

ஈசன் வரங்கொடுத்துப் போனபின்பு
ஏந்திழையாகிய ஆச்சியம்மன்
யாவரும்போற்றக் - காஞ்சிப்பதி - மேவிடலுற்றாள் - முதல்பூசை
யிங்கேபெற வேண்டும்மென அங்கேபுசழ் பூண்டன்னையும்
ஏற்றமுடனேநினைந்தாளே (7)

வானமளாவிய ஓமகுண்டம் கரு
மலையானும் முன்னூறுமார் சங்கிலி
மார்மீது தூக்கி - அறுபது - மார்அட்டந்தாக்கி - எழுபது
மார்நீண்டிடு தடிபட்டயம் ஓர்மந்திரம் கோடாலியும்
வர்ணமணிவேலுங் கைப்பிடித்து (8)

மேகவர்ணப்பரி மீதேறிவர
வெற்றிமிகு மருளாண்டவனும்
மேவுமான்புரவி - மீதினிலே - தாவியேவரவும் - கன்னியர்கள்
மேலாகிய நிலாவினில் கோலாகல மாலாகிடும்
வீசும்பாலைமலையானும் வந்தான் (9)

வல்லமை பெற்றிடும் கூத்தப்பெருமாளும்
வன்னியராஜர் குமாரமக்கள்
மாகாத்தவராயன் - விருதுட - னேகாத்திடுதுாயன் - மதுரையான்
மதர்பேச்சியும் பித்தாண்டியும் முதலோர்களும் ஒத்தாண்டொரு
மாகடலென்னத் திரண்டார்கள் (10)

ஆயிரந்தாதியர் வைரத்தினங்கள்
அழுத்திய பொன்சிவிகைதனையே
அன்புடன் தூக்கி - வரமிகு - இன்பமதாக்கி - விருதுகள்
அணிமுன்வர மிருதுந்திமி முரசும்செய செயவென்றிட
ஆச்சிகொலுவுக் கெழுந்தாளே (11)

நாகசுரந்தவில் எக்காளம்பேரிகை
நல்லபதினெட்டு வாத்தியத்தின்
நாதமுழங்க . மங்கள - கீதம்வழங்க - ஆலத்திகள்
நவமரிமணி பலகோடிகளுடனே இணை மடவார்களும்
நன்மையுடன் கொண்டு வந்துசுற்ற (12)

தத்திமி தோமென மத்தளங் கொட்டவும்
தய்யலரொத்து ீடித்திடவும்
சாமரைபோட - இருபுற ^ மாமறைபாட - கவிவலர்
சந்தத்துறை சிந்துக்கவி விந்தைப்பத முந்திச்சொல
சாரிவருகிருள் மாதாவும் (13)

வண்ணமத்தாப்புகள் ஆகாசபாணங்கள்
மண்டலம் பொங்கும் அதிர்வேட்டும்
வானமளாவ - தேவர்களும் - தானுமுலாவ - மலர்மழை
வருஷித்திட இருபக்கலும் விலகிச்செல உரைகட்டியர்
மந்திரிமார்களுஞ்சூழ்ந்துவர (14)

இந்தப்படி வைபவத்துடனே அம்மன்
எற்றகொலுவினில் வந்தருள
எந்திழையார்கள் - அம்மனிடம் - சூழ்ந்திருந்தார்கள் - கன்னியர்கள்
இணைமாமலருக்கேகினர் துணைபாலயலைச் சேவகன்
எற்றநீலாவினி லேறிவந்தான் (15)

வேறு.

விந்தைமிகுத்திடும் நந்தவனத்தினில்
வேடிக்கையாக மலர்பறித்து
விளைபொற்சுனை-யதில்மொய்த்ததி-களியுற்றவர்-முழுகித்துகில்
மேவவுடுத்துப் பணியணிந்தார் (16)

தித்திக்குந்தேங்கனி எத்திக்குமோடியே
தேடிமலையானுங் கொண்டுவர
தின்றங்கவர்-துன்றுஞ்சுனை-யின்றன்புனல்-உண்டன்பொடு
தேவியிடம்வருகின்றார்கள் (17

இப்படியாக இருக்கின்ற வேளையில்
எங்களாச்சியம்மன் மாதாவும்
எழில்கம்பையில்-முழுகும்படி-பெருகுஞ்சிவி-கையில்வந்தவன்
ஏறிப்புறப்படலுற்றாளே (18)

தேவியெனுங் கெங்கை யைப்பணிந்தே அம்மன்
தீர்த்தங்களாடி யலங்கரித்து
சிவபூசைகள்-செயவேகரை-மணலாலொரு-சிவலிங்கமும்
சேர்த்திப் பிடித்தங்கு வைத்தாளே (19)

வைத்துச் சோடசஉப சாரபூசைகள்
வகைவகையாவே தான்முடித்து
மன்னுஞ்சிவி-கையிலேறியே-மின்னுங்கிளி-ஒயிலாகவே
மாதவக்காஞ்சி நகரடைந்தாள் (20)

ஆச்சிக்குப் புட்பங் கொளப்போன கன்னியர்
யாவருந் தங்கக்குடலை கொண்டு
அடிமாமல-ரிணைமீதினில்-மலைபோலவே-குவியும்படி
ஆனமலர்கள் சொரிந்தார்கள் (21)

அந்தக்ததிதனில் ஆச்சியம்மன் சேனை
யாவரும்வந்து பதம்பணிந்தார்
அனைவோர்களு-மிகவாழ்வுகள்-பெறவேநிறை-செயமேவிட
ஆச்சி வரமுங் கொடுத்தாளே. (22)

மெத்தவரங்கள் கொடுத்தபின் ஆச்சியும்
மேவுங்கருமலை யைக்கூவி
விரைசந்தன-மலர்தங்கிய-பொழில்ஒன்றிடு-வளமெங்கணு
மிஞ்சிய அம்பலூர் போகவேண்டும் (23)

அம்பலூர் கும்பகோணம் போய்ப்படமயியின்
ஆலயந்தன்னில் ரண்டாம்பூசை
யதுபெற்றிட-இதுநற்றதி-மதமூர்றந-மதுவெற்றிகொள்
ஆர்ப்புறம்சேனை நடத்துமென்றாள் (24)

உத்திரவுசெய்த மாத்திரம் தன்னிலே
ஒங்கியெழுந்தண்ணன் நல்லதென்று
ஒருபேரிகை-யறையும்படி-சொலவேயனை-வருமங்கொரு
ஒட்டத்திலேவந்து சேர்ந்தார்கள் (25)

வேறுமெட்டு.

அண்ணன் பெரும்புலி போலெழுந்தே படை
யானபதினெட்டுந் தானணிந்து
வண்ணப்புரவியில் மண்டலமுள்ள
மலைகளதிர நடந்தாரே (26)

சத்திகெவுரிமகமாயி ஆச்சியும்
தங்கப்பல்லக்கின் மிசையேறி
சுற்றியும்மாதர் வரிசைகள்செய்து
தோழுதிடவே புறப்பட்டாளே (27)

வந்துகருமலை முன்னடக்க தங்க
மார்களுடன் மருளாண்டவனும்
மூர்திடுபேச்சி பித்தாண்டியும் ஓசை
முழங்கவலது புறம் நடந்தார் (28)

கூத்தப்பெருமாளும்வன்னியராஜர்
குமாரமக்கள் மறுமன்னவரும்
காத்தவராயன்மதுரையணனுக்குகே இடதுபுறம் நடந்தார் (29)

வந்தவர்யாவரும் தானடந்தே ஒரு
மத்தியானப்பிரயாணம் வந்து
சந்தமதாகவடகிழக்குத்திசை
தங்கிடக்கூடாரம் போட்டார்கள் (30)

அப்பொழுதம்மனுங்காஞ்சிக்கொலுவினில்
ஆடையைநாம் வைத்துவந்தோமே
ஒப்புடன்காவலுக்காரையனுப்பலாம்
யோசித்துச்சொல்லுங்களென்றாளே (31)

வல்லமருளாண்டிக்கேதகுமென்றிட
மாதாவும்பத்திரமாயிரென்று
சொல்லிப்பனிரெண்டு நாட்பிரயாணத்தில்
சோணசயிலத்தைக்கண்டாரே (32)

அங்குதெரிசனம்செய்தபின் அம்பலத்
தாடியைப்போற்றிப்பணிந்தபின்பு
பொங்குதிருவிடைமா மருதூரிற்
புனிதனைக்கண்டு பணிந்தேற்றி (33)

அம்பலூராலயம் தானுமுன்னாகவே
ஐந்துநாழிகைவழியிருக்க
எம்பெருமாட்டியிருந்து மனதில்
இரணியன் தன்வலுவெண்ணலுற்றாள் (34)

வல்லவிரணியன் அம்பலூராலயம்
வாசலில்காத்திடும் சேவகனை
வெல்லவே சன்னியாசிக்கிழவியென
வேடந்தரித்து நடந்தாளே (35)

ஆச்சிவருகின்ற வேளையில் அம்பலூ
ராலயந்தனுங்கிடுகிடென
கொச்சிபடம்பி யிரணியனைச்சென்று
நாடியறிந்திடுமென்றாளே (36)

தேடிக்கிழவியைக்கண்டு படம்பிக்குச்
சேதிகள்சொல்லியே வந்தவனை

ஓடிக்குடலைப்பிடுங்கி வதைத்தபின்
உற்றிடுந்தீக்குளித்தாலயத்தில் (37)

தாதியரையெச்சியிட்ட பொன்னூஞ்சல்
தனில்வந்திருந்து நிலையாகி
ஆதிமைவென்றிரண்டாம்பூசைதனை
அம்பலூர்தன்னிலே பெற்றாளே (38)

காஞ்சிக்குப்போன மருளாண்டியம்மனைக்
காணவரத்துகில் சோரர்கொள்ள
வாஞ்சைமிகுத்தமலை யானுந்தேடியே
வந்துகிளிவேட்டையாடியபின் (39)

மெச்சும்பெருமான் தயவினிலாடை
வெளிப்பட்டதால் வெள்ளிக்காலையிலே
உச்சிதமாகவே மெச்சும்பெருமானுக்
கொர்கழுப் பூசைநடத்துமென்றாள் (40)

போற்றிவடகரைதென்கரை தன்னிலே
பூசைகள் முற்றுமுடிந்தவுடன்
நாற்றிசைபெற்றிடும் ஆலந்தூர்பூசையும்
நாயகிபெற்றபின் சேனையுடன் (41)

ஏற்றதிருவெங்கிமாமலைச் சாரலில்
ஈச்சங்காட்டில் எமராஜாவின்
ஆற்றல் மிகுத்தபடையும் அமர்செய
அம்மனுங்கோப மடைந்திடவே (42)

கோவமடைந்திட யேமராஜன்வந்து
கூடிச்சமாதானம் பேசியபின்
தேவியெனக்குநீ பூசைகொடுமென
செப்புவாளுத்தமியாச்சியம்மன் (43)

தங்கப்பல்லக்கேறும் எமராஜவுக்கும்
சார்ந்ததுள்ளுகுட்டி வீரனுக்கும்
இங்கிதமாகவே ஆதிவாரந்தனில்
ஏற்றமுப் பூசைநடத்துமென்றாள் (44)

அம்மனுக்குத்தினைப்பொங்கலும் குட்டியும்
ஆகக்கொடுத்தவர் சேர்ந்திருக்க
சம்மதமில்லா முதலிவணிகர்க்குத்
தாயாருஞ் சோதனை காட்டினளே (45)

தண்ணீரினாலே பந்தங்கொளுத்தியின்னும்
தக்கநெருப்புவசி பிடிங்கி
பண்ணியமந்திரவரதிமேல் விட்டபின்
பக்ஷமுடதேரும் பெற்றாளே (46)

அம்மனுக்காலயம் கட்டிவைத்துப்பூசை
யன்புடன் செய்தபின் ஆண்டபுரம்
செம்மைமிகுத்திடும் ரக்கம்பட்டிகூடற்
சேறியிலும் பூசைகொண்டாளே (47)

கொண்டபின் நற்றிருப்பாண்டிக்கொடுமுடிக்
கொற்றவனநல்லாச்சி பெற்றெடுத்த
மண்டலமெங்கும் புகழும் பெரியாச்சி
மன்னன்மகிழ்ந்திட ஆச்சியம்மன் (49)

சொல்லுங்கலி நாலயிரத்தொளாயிரம்
தொண்ணூற்றெழில்மன்மதவருடம்
நல்வசிங்கமதியஞ்சிலம்மன்னவன்
நாட்டுந்தலங்குடிகொண்டாளே (49)

வந்துகுடிகொண்ட ஆச்சியம்மனுக்கு
மங்கள பூசைபத்தொன்பதிலே
சுங்கரமாகநடத்தியனைவரும்
தோத்திரம்செய்துசுகமடைந்தார் (50)

வாழிகொடுமுடி வாழிபாச்சியம்மன்
வாழியோமகுண்டம் சேனைகளும்
வாழிபெரியாச்சிமன்னன் கிளைசுற்றம்
மண்டலமெங்ஙுகம் வாழியவே, (5I)